பணி நிரந்தரம் செய்யக் கோரி சென்னையில் போராட்டம்!

மருத்துவமனைப் பணியாளர்கள் 300க்கும் மேற்பட்டோர் குண்டுக்கட்டாக கைது!

போலீசார் சாலையில் தரதரவென இழுத்துச் சென்றதால் பலர் படுகாயம்!

சென்னை, அக்.13



பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே போராட்டம் நடத்தி வந்த அரசு பன்னோக்கு மருத்துவமனை பணியாளர்கள் 300க்கும் மேற்பட்டோரை போலீசார் வலுக்கட்டாயமாக சாலையில் தரதரவென இழுத்து சென்று கைது செய்தனர். மேலும், போராட்டத்தை தலைமை ஏற்று நடத்திய நிர் வாகிகளை ஓட்டல் அறைகளிலேயே போலீசார் சிறை வைத்ததால் பரப ரப்பு ஏற்பட்டது.

தமிழக முழுவதும் உள்ள பன் னோக்கு அரசு மருத்துவமனையில் 13 ஆண்டுகளுக்கு மேலாக ஒப்பந்த முறையில் பணியாற்றி வரும் ஆயி ரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் தங்களை பணி நிரந்தரம் செய்ய கோரியும், மாதம் ஒரு நாள் ஊதியத் துடன் விடுமுறை, அரசு விடுமுறைகளில் தங்களுக்கும் விடு முறை அளிக்க கோரி பல ஆண்டுக ளாக போராடி வருகின்றனர். அதேநே ரம் சட்டமன்ற தேர்தலின் போது த.வெ.க. நாங்கள் ஆட்சிக்கு வந்தால், அரசு பன்னோக்கு மருத்துவம னைகளில் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்கள் பணி நிரந்தரம் செய்யப் படுவார்கள் என்று வாக்குறுதி அளித்தனர்.

நூற்றுக்கணக்கான போலீஸ் குவிப்பு!

ஆனால் த.வெ.க. அரசு ஆட்சிக்கு வந்து 5 மாதங்கள் ஆன நிலையில் தேர்தலின் போது அளித்த வாக்குறு தியை நிறைவேற்றாததை கண்டித்து தமிழகம் முழுவதும் உள்ள அரசு பன்னோக்கு மருத்துவமனையில் பணியாற்றி வரும் ஒப்பந்த பணியா ளர்கள் நேற்று காலை 10 மணி அள வில் எழும்பூரில் உள்ள ராஜரத்தினம் மைதானம் அருகே போராட்டம் நடத்த எழும்பூர் காவல் நிலையத்தில் அனுமதி கோரினர். ஆனால் போலீ சார் போராட்டத்திற்கு அனுமதி அளிக் கவில்லை.

இதையடுத்து, பன்னோக்கு அரசு மருத்துவமனை பணியாளர்கள் திட் டமிட்டப்படி போராட்டம் நடத்தப்படும் என்று அறிவித்தனர். பின்னர் போராட்டத்தை கட்டுப்படுத்தும் வகை யில் 200க்கும் மேற்பட்டபோலீசார் எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே சாலையில் தடுப்புகள் அமைத்து பாதுகாப்பு பணியில் ஈடுபட் டனர். தடையை மீறி போராட்டத்தில் ஈடுபடும் பணியாளர்களை கைது செய்து ஏற்றும் வகையில் 5க்கும் மேற்பட்ட பேருந்துகள் நிறுத்தி வைக் கப்பட்டது.

அப்போது திட்டமிட்டப்படி தமிழகம் முழுவதிலும் இருந்து அரசு பன் னோக்கு மருத்துவமனைகளில் பணி யாற்றும் ஒப்பந்த பணியாளர்கள் 300க்கும் மேற்பட்டோர் ஒன்று கூடி னர். இதை கவனித்த பாதுகாப்பு பணி யில் இருந்த போலீசார் அவர்களை தடுத்து பேருந்து களில் ஏற்ற முயன்ற னர். இதனால் ஆத்திரமடைந்த பணி யாளர்கள் திடீரென சாலை மறியலில் ஈடுபட்டனர். ஒரு கட்டத்தில் போலீ சார் சாலை மறியலில் ஈடுபட்ட பணியா ளர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி னர். ஆனால் அவர்கள், எங்கள் கோரிக்கையை அரசு ஏற்கும் வரை நாங் கள் இங்கிருந்து கலைந்து செல் லமாட்டோம் என்று கூறி அரசுக்கு எதிராக கோஷம் எழுப்பினர்.

பின்னர் பேச்சு வாத்தை தோல்வி யில் முடிந்ததை தொடர்ந்து போலீசார் சாலை மறியலில் ஈடுபட்ட பணியா ளர்களை கைது செய்ய முயன்றனர். இதனால் போலீசாருக்கம் போராட்டக் காரர்களுக்கும் இடையே கடும் வாக்கு வாதம் ஏற்பட்டது. ஒரு கட்டத்தில் போலீசார் மறியலில் ஈடுபட்ட அனைவரையும் குண்டு கட்டாக கைது செய்த னர். ஆனால் மறியலில் ஈடு பட்ட பணியாளர்கள் சாலை யில் படுத்துக் கொண்டு கைது செய்ய முயன்ற போலீசாரை கண்டித்து கோஷங்கள் எழுப் பினர். இதனால் சிறிது நேரம் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இருந்தாலும் போலீ சார் பெண் பணியாளர்கள் என்றும் பாராமல் ஆண் காவலர்கள் உதவியுடன் தரத ரவென இழுத்து சென்று பேருந்துக ளில் ஏற்றினர். பலர் இதில் படுகாயம டைந்தனர். இருந்தாலும் போலீசார் போராட்டத்திற்கு வந்த ஒருவரையும் விடாமல் துரத்தி சென்று கைது செய் தனர். ஒருவரை கைது செய்ய 10 போலீசார் பயன்படுத்தப்பட்டது. அதில் பெண் பணியாளர்கள் மயங்கி விழுந் தனர்.

ஆனால் அவர்களை மருத்துவம னைக்கு அழைத்து செல்லாமல் பேருந்துகளில் ஏற்றி சென்றனர்.

ஓட்டலில் சிறை வைப்பு!

அதேநேரம் எழும் பூரில் ஓட்டலில் தங்கி இருந்த போராட்டத்தை தலைமை ஏற்றி நடத்தும் அரசு பன் னோக்கு பணி யாளர்களின் நிர்வாகி கள் பலரை போலீசார், ஓட்டலிலேயே சிறை வைத்தனர். மேலும் வெளி மாவட்டங்களில் இருந்து எழும்பூர் நோக்கி வந்த பணியாளர்கள் பலரை கிளாம்பாக்கம் பேருந்து நிலையம், கோயம்பேடு பேருந்து நிலையங்களில் போலீசார் தடுத்து திருப்பி அனுப்பினர்.

தமிழகம் முழுவதும் 13 ஆண்டுக ளாக பணி நிரந்தரம் செய்ய கோரி போராட்டம் நடத்த வந்த அரசு பன் னோக்கு பணியாளர்களை போலீ சார் மூலம் த.வெ.க. அரசு அடக்கு முறையில் ஈடுப டுவதாக பலவேறு அரசி யல் கட்சிகள் கண்டனம் தெரி வித்துள்ளனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் பேரூர் கழக மாவட்ட பிரதிநிதி கு.மணிமாறன் – முன்னாள் பேரூராட்சி துணைத் தலைவர் எம். உமா ஆகியோர் இல்லத் திருமண விழா நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் வல்லூர் எம்.எஸ். கே.ரமேஷ்ராஜ் தலைமையில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழிநேரில்சென்று மணமக்கள் டி.சக்திதாசன், எம்.தமிழரசி ஆகியோரை வாழ்த்தினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் ஜெ.மூர்த்தி, மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன், பொதுக்குழு உறுப்பினர் எஸ். சுப்பிரமணி, நிர்வாகிகள் அலெக்சாண்டர், பா.து.தமிழரசன், க.சு. தமிழ் பிரியன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

மாம்பலம் சந்திரசேகர் தலைமை! ஜெ.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி. – எஸ்.ஆஸ்டின் பங்கேற்பு!

சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு அறிக்கை!

சென்னை, அக். 13-

இது குறித்து மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு அறிக்கை வரு மாறு:

சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நாளை 14.10.2026 புதன்கிழமை அன்று சென்னை, மாம்பலம் சந்தி ரசேகர் திருமண மண்டபம் 34, எல்லையம்மன் கோயில் தெரு, மேற்கு மாம்பலத்தில் காலை 10 மணியளவில்



மாவட்ட அவைத் தலைவர் மாம்பலம் சந்திரசேகர் தலைமையில், தலைமை கழக பிரதிநிதிகள் நாடாளு மன்ற உறுப்பினர் ஜெ. கான்ஸ்டன்டைன் ரவீந்தி ரன், சட்டமன்ற உறுப்பி னர் எஸ்.ஆஸ்டின் ஆகி யோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகி றார்கள்.

எனவே இக்கூட்டத்தில் மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், தலை மைச் செயற்குழு பொதுக் குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழகச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர் அணி களை சேர்ந்த மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆகி யோர் தவறாமல் பங்கேற்கு மாறு கேட்டுக் கொள்ளப்ப டுகிறது.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு தெரிவித்துள்ளார்.

குறுவை நெல் சாகுபடி 28 சதவீதம் குறைவு!

சென்னை, அக். 13 –

தமிழ்நாட்டில், 2025-26 ஆம் ஆண் டில், 130.23 லட்சம் மெட்ரிக் டன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில், 122.43 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்யப்பட்டது. 2026-27 ஆம் ஆண்டு 79 லட்சம் மெட்ரிக் டன் நெல் உட்பட மொத்தம் 125 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்களை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஏப்ரல்செப்டம்பர் மாத காரிஃப் பருவத்தில் நெல் சாகுபடி பரப்பளவு 28 சதவீதம் குறைந்துள்ளது; 20252ல் 17.5 லட்சம் ஹெக்டேராக இருந்த பரப்பளவு இந்த ஆண்டு 12.52 லட்சம் ஹெக்டேராகக் குறைந்துள்ளது. இது 4.98 லட்சம் ஹெக் டேர் சரிவாகும். மேட்டூர் அணை திறப்பதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் பருவமழை 30 சத வீதம் வரை பொய்த்ததும், காவிரி ஆற்றில் நீர்வரத்து குறைந்ததும் இந்தப் பெரும் சரி வுக்கு முக்கியக் காரணங்களாகும். சாகுபடி குறைந்ததன் காரணமாக மாநிலம் முழுவ தும் உள்ள 4 ஆயிரத்து 400 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் 300 கோடி ரூபாய் மதிப்பிலான உரங்களும் விதைகளும் தேங்கியுள்ளதாக கூட்டுறவுத் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



கலைஞர் கடிதம்

"பவளவண்ணன் ஒரு பாடம்!"



உடன்பிறப்பே,

இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவதுதான் வாழ்க்கை என்று தத்துவம்கூற யார் தயவும் தேவை யில்லை. அது நமக்கே நன்றாகத் தெரிந்த ஒன்றுதான். அதிலும் என்னைப் பொறுத்தவரையில் எத்த மகிழ்ச்சிகர மான நிகழ்ச்சியையும் எண்ணிப் பார்த்து இன்பமடையும் நிலைமை ஓரிருமணி நேரத்திற்கு மேல் நீடித்தது கிடை யாது. என்னுடன் நெருங்கிப் பழகுகிற நண்பர்கள், கழக முன்னணியினர் இதனை நன்கு அறிவார்கள்.

அறந்தாங்கி மாநாட்டுச் சிறப்பு குறித்து வெற்றிக் களிப்புடன் சென்னைக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். தாம்பரத்தில் நாளிதழை வாங்கிப் பார்த்தபோது, அறந் தாங்கி பற்றிய இனிய நினைவுகள் எல்லாம் எங்கேயோ பறந்தோடிவிட்டன. என் உயிரினிய உடன்பிறப்புக்களில் ஒன்றான பவளவண்ணன் மருத்துவமனையில் ஆபத்தான கட்டத்தில் இருப்பதாக அந்த இதழிலே வந்த செய்தி, என் நெஞ்சிலே செந்தீயாகத் தாக்கிச் சுட்டது. சிரித்த முகமும் சிரம் தாழ்த்தி என் எதிரில் நிற்கும் பணிவும், கழகக் காரியங்கள் ஆற்றுவதில் எறும்பின் சுறுசுறுப்பும், என்னிடத்திலும், கழகத்திடத்திலும் இதயத்தைப் பறி கொடுத்த பாசமும் கொண்ட அவரைப் பார்க்கும்போ தெல்லாம், "உடம்பைக் கவனமாகப் பார்த்துக்கொள்! நீயாகக் கெடுத்துக் கொள்ளாதே!" என்று எத்தனையோ முறை சொல்லியிருக்கிறேன், என் செய்வது; காலில் விழுவதுபோலக் கெஞ்சிக் கேட்டும், மன்றுடியும்கூட என் வேண்டுகோளைக்கேட்காமல் புறக்கணித்துவிட்டு பிடிவாத மாக உடலைக் கெடுத்துக்கொள்ளும் என் உயிர் நண்பர் களின் பட்டியலில்தான் பவளவண்ணனும் இடம் பெற்று விட்டார்.

உடன்பிறப்பே! நீயும் நானும் எத்தனை நாளைக்கு உயிர்வாழப் போகிறோமோ; அது வேறு விஷயம்! அதற்காகத் தெரிந்தும் நச்சுப் பாம்பை எடுத்து நாக்கிலே விட்டுக் கொள்ளக் கூடாதல்லவா?

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு நிலை வைக்கவேண்டுமென்று உறுதியாக நின்றவர் பவள வண்ணன்தான்!

என் வேண்டுகோளைக் கேட்டுச் சிலவைக்கும் முயற்சி யைக் கைவிட்ட அந்தக்காளைப் பருவத்தினன், தன் உயிருக்கு உலைவைக்கும் எனத் தெரிந்தும், நாலும் பல முறை வேண்டியும், அதைமட்டும் கேட்க இயலாமல், குழந்தைகளையும் குடும்பத்தினரையும் மட்டுமல்ல; நம்மையும் விட்டுப் போய்விட்ட அவலத்தை எப்படித் தான் தாங்கிக் கொள்வது?

ரயிலில் இருந்து இறங்கியதும், அவசர அவசரமாக மருத்துவமனைக்கு ஓடுகிறேன்—என் ஆருயிர் உடன்பிறப்புக் களில் ஒன்றை எப்படியும் பிழைக்கவைத்துவிட வேண்டு மென்று! ஆனால் என் வேகத்தை வெற்றிகண்டுவிட்டது சாவு! நான் போய்ச் சேருவதற்குள் அந்தச் சிங்கம் போய் விட்டான்!

அவனுக்காக நான் அழுவதா?

இன்னும் சிலபேர் அவனைப்போலத் தங்களைப் பாழாக்கிக் கொண்டிருக்கிறார்களே; அவர்களை நினைத்து அழுவதா?

அவர்களுக்குப் பவளவண்ணனுடைய பாடமாக இருக் கட்டும். தன் சாவின் மூலம், அந்தத் தங்கத் தம்பி, வேறு சில உடன்பிறப்புக்களின் சாவைத் தடுத்தான் என்றுவது, நிலை உருவாகட்டும். அந்தப் புதுநிலை கண் டாவது நான் ஆறுதல் பெறுகிறேன். நமது அண்ணன் நமது கையில் கொடுத்த கொடியும், நம் நெஞ்சில் பதிய வைத்த இலட்சியமும், தமிழர்க்கென உருவாக்கித் கொடுத்த அரசும், புவியெங்கும் புகழ் பரப்பிட — அனுவளவு களங்கமும் அண்ணு உருவாக்கிய கழகத்திற்கு ஏற்படாமல் காத்திட—என் அன்பு உடன்பிறப்பே! நீ உறுதி கொண்டு நடந்திடுக! தாழ்ந்துவிட்டது என்று தருக்கர்களால் கூறப்பட்ட கழகம், இன்று தலைநிமிர்ந்து "ராஜநடை" போடுவதை நாடு காண்கிறது.

மாற்றாரும் நமது மாண்பு உணர்ந்து மகிழ்ந்து பாராட்டுகின்றனர்.

பிரிந்து சென்ற நமது உண்மையான உடன் பிறப்புக்கள், சிலர் நாங்கள் சென்ற இடத்தின் தகுதியைப் புரிந்து கொண்டு, இன்று தெளிந்து நம்மிடையே திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

கழகமொன்றே இருள்போக்கும் கதிரவன் என இந்திய அரசியல் அரங்கம் இன்று விமர்சித்துக்கொண்டிருக்கிறது.

இந்த நேரத்தில் கழகத்திற்கு நமது உழைப்பு கடுமை யாகத் தேவைப்படுகிறது. நேர்மையான உழைப்பு— நாணயமான செயல்—வலிவான உடல்—திடமான உள்ளம்—இத்தனையும் தேவை. இதனைக் கெடுத்திடக் கூடிய தீமை, கடுகத்தனையும் தலைகாட்டாமல் பாடுபடு வோம். இந்தச் சூளுரையைப் பவளவண்ணன் கல்ல றைக்கு முன்னால் எடுத்துக்கொள்வோம்! சொல்லித் தர வேண்டியதை ஒலிவுமறைவின்றிக் கட்டியின் நன்மைக் காகச் சொல்லிவிட்டேன். அதற்காக என்னை மன்னித்துக் கொள்.

அன்புள்ள,
மு.க.
17—10—75

சென்னை மாநகர முன்னாள் துணை மேயர்

சி.பி.பவளவண்ணன்

அவர்களின்

51ம் ஆண்டு நினைவு அஞ்சலி

என்றும் உங்கள் நினைவில்
மகன் : சி.பி.இறைவன்